**இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவிம - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் (''குழு'') 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, நிதிகள் மற்றும் ஒதுக்கங்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (எஸ்எம்ஈஎஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு (எஸ்எம்ஈஎஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, குழு தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது குழுவை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு குழு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு குழுவிற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என

முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால் அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- குழுவின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- குழுவின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் குழு இணங்கியிருந்ததா என்பதும்,

- குழு அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- குழுவின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) **1973 இன் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் 41 ஆம் பிரிவின் கீழ் விளையாட்டுத்துறை அமைச்சரால் உருவாக்கப்பட்ட 1993 யூன் 29 ஆம் திகதிய 773/7 ஆம் இலக்க பிரமாணம்** | | | |
| (i) 2(அ) பிரிவு | சம்மேளனங்கள், குழுக்கள், மாநாடுகள் அல்லது ஏனைய கூட்டங்களில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் உட்பட விளையாட்டு அமைச்சரிடம் சமர்ப்பிப்பதற்கு பிரதிநிதி அல்லது பிரதிநிதிகளிடமிருந்து அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வதற்கு குழு தேவையான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. | 2024 சனவரி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அமைச்சருக்கும் அமைச்சின் செயலாளருக்கும் அறிக்கைகளை வழங்குவதற்கு நாங்கள் ஒப்புக்கொண்டோம். | குறித்துரைக்கப்பட்ட விதிகள் மற்றும் பிரமாணங்களை கடைபிடிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ii) 7 ஆம் பிரிவு | அத்தகைய கூட்டம் நடைபெற்று 30 நாட்களுக்குள் விளையாட்டுத்துறை அமைச்சரிடம் ஆண்டறிக்கை மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களுடன் வருடாந்த பொதுக் கூட்டக் குறிப்புக்களை சமர்ப்பிப்பதற்கு குழு நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. | டிஜீ விளையாட்டுத்துறையிடம் அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு மேலதிகமாக, விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்க அமைச்சருக்கும், அமைச்சின் செயலாளருக்கும் ஆண்டறிக்கையை வழங்குவதற்கு இணங்கியிருந்தோம். | |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | 8 (அ) மற்றும் (ஆ) பிரிவு | உள்ளூர் அல்லது வெளிநாட்டு வளமூலங்களிலிருந்து ஒலிம்பிக் குழு பெற்ற அனைத்து பணம், உபகரணங்கள் மற்றும் ஏனைய வளங்கள் மற்றும் அனைத்து பண கருவிகள் தொடர்பான காலாண்டு அறிக்கைகள் மற்றும் ஒவ்வொரு காலாண்டிலும் ஒலிம்பிக் குழுவினால் ஆற்றப்பட்ட செயற்பாடுகள் தொடர்பான காலாண்டு முன்னேற்ற அறிக்கைகள் விளையாட்டுத்துறை அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 சனவரி முதல் அமுலுக்கு வரும் வகையில் காலாண்டு அறிக்கைகளை அமைச்சருக்கும் அமைச்சின் செயலாளருக்கும் வழங்குவதற்கு இணங்கியிருந்தோம். | குறித்துரைக்கப்பட்ட விதிகள் மற்றும் பிரமாணங்களை கடைபிடிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | **1973 இன் 25 ஆம் இலக்க விளையாட்டுச் சட்டத்தின் 19 மற்றும் 41 ஆம் பிரிவின் கீழ் விளையாட்டுத்துறை அமைச்சரால் உருவாக்கப்பட்ட 1976 நவம்பர் 30 ஆம் திகதிய 211/03 ஆம் இலக்க பிரமாணத்தின் 2(அ), (ஆ) மற்றும் (இ) பிரிவு** | பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றியிருந்த ஒலிம்பிக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட 06 அதிகாரிகளுக்கு விளையாட்டுத்துறை அமைச்சின் அங்கீகாரத்தை குழு பெற்றிருக்கவில்லை. மேலும், அவர்களில் 02 பேர் இலங்கைக்கு திரும்பியிருக்கவில்லை. | அமைச்சரின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு, பங்கேற்பாளர்களின் முழுப் பட்டியலையும் அமைச்சிடம் சமர்ப்பிக்கிறோம். | |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 59,349,292 மிகையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 14,920,228 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 44,429,064 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது சர்வதேச நிறுவனங்களின் மானியங்கள், வட்டி வருமானம் மற்றும் செயற்திட்ட வருமானம் என்பன முறையே ரூபா 33,802,724, ரூபா 8,372,112 மற்றும் ரூபா 117,914,660 ஆல் அதிகரித்தமையே இம் முன்னேற்றத்திற்கு பங்களித்த பிரதான காரணமாகும்.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளை மேவுகை செய்வதற்கு 03 பத்திரிகையாளர்களிற்கு தேசிய ஒலிம்பிக் குழு ரூபா 1,975,800 தொகையான விமான பயணச்சீட்டுக்களின் மொத்தக் கிரயம் மற்றும் ரூபா 1,227,714 தொகையான நாளாந்த மொத்த படிகளிற்கு அனுசரணையளித்திருந்தது. மேற்படி ஊடகவியலாளர்கள் ஒலிம்பிக் குழுவின் தலைவர் மற்றும் செயலாளரின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் அனுசரணை வழங்குவதற்கான காரணங்களை நியாயப்படுத்தி வெளிப்படைத்தன்மையின்றி தெரிவு செய்யப்பட்டுள்ளனர். | NOCSL இற்கு அவர்களின் நிதி உதவி கோரிக்கைக்கு பதிலளிக்கும் போது, EXCO இன் அங்கீகாரத்துடன் நாங்கள் பயணச்சீட்டுக்களை ஏற்பாடு செய்தோம். மேலும் அவர்களின் உணவுக்கான நாளாந்த படிகளை வழங்கினோம். எனினும் இணங்கியவாறு பங்கேற்பாளர்களுக்கான நிதி ஏற்பாடுகளுக்கான சுற்றறிக்கையை முறைமைப்படுத்துவோம். | வெளிப்படையான ஊடக அனுசரணை கொள்கையை தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | தேசிய ஒலிம்பிக் குழுவின் அரசியலமைப்பின் 04 ஆம் உறுப்புரையின் 3(ஆ) பிரிவின் பிரகாரம் இலங்கைக்குள் பொதுவாக விளையாட்டுக்களை மேம்படுத்துதல், வசதியளித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் என்பன நோக்கங்களில் ஒன்றாகும். 32 சம்மேளனங்கள் தேசிய ஒலிம்பிக் குழுவில் பதிவு செய்திருந்த போதிலும் ஒவ்வொரு விளையாட்டுக்கும் நீண்டகால அபிவிருத்தி திட்டம் தேசிய சம்மேளனங்களுடன் இணைந்து குழுவால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டங்களின் அபிவிருத்திக்கான எமது மூலோபாயத் திட்டத்தில், ஒவ்வொரு சம்மேளனத்திற்கும் ஒரு திட்டத்தை உருவாக்கும் செயன்முறையில் நாங்கள் ஈடுபட்டுள்ளோம். சம்மேளனங்களுடன் மேலும் கலந்துரையாடி எதிர்காலத்தில் தேவையானவற்றை செய்வோம். | ஒவ்வொரு விளையாட்டுக்கும் நீண்டகால அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | தேசிய ஒலிம்பிக் குழு மீளாய்வாண்டின் போது 29 விளையாட்டு சங்கங்களில் 17 சங்கங்கள் தொடர்பாக ஒதுக்கப்பட்ட ரூபா 3,400,000 தொகையான வருடாந்த நிர்வாக மானியம் மற்றும் ரூபா 3,174,651 தொகையான ஏனைய செயற்திட்டம் தொடர்பான கொடுப்பனவுகள் மற்றும் முன்னைய ஆண்டு நிர்வாக மானியம் என்பவற்றை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகளை | குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட நடைமுறையானது குறித்த சில தேவைப்பாடுகளுடன் இணங்குவது மற்றும் அவர்களின் வருடாந்த மானியங்கள் மற்றும் செயற்திட்டம் தொடர்பான செலவினங்களுக்கு விண்ணப்பித்தலாகும். தேவைப்பாடுகளை ஆதரிப்பதற்கும் எமது | ஒதுக்கப்பட்ட வருடாந்த நிர்வாக மானியங்கள் மற்றும் ஆண்டுக்காக வழங்கப்பட்ட செயற்திட்டம் தொடர்பான செலவினங்களைத் தீர்ப்பனவு செய்வதற்கு தேவையான |

| | | | |
|---|---|---|---|
| | எடுத்திருக்கவில்லை. | கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கும் வழிகாட்டல்களைப் பின்பற்றுவதற்கு தேசிய சம்மேளனங்களைத் தொடர்ந்து வலியுறுத்துவோம். | நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றிய அதிகாரிகளுக்கு 04 நாட்களுக்கு மாத்திரம் தங்குமிடங்களை ஒதுக்குமாறு விளையாட்டுக்கள் மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளரினால் விடுக்கப்பட்ட கோரிக்கையை பரிசீலிக்காமல், £4,456 இற்கு சமமான ரூபா 2,139,548 தொகை 14 நாட்களுக்கு ஒதுக்கப்பட்ட தங்குமிட வசதிகள் சார்பாக செலுத்தப்பட்டது. மேற்படி அதிகாரிகள் இந்நிகழ்வில் பங்குபற்றியிருக்காத போதிலும் அவ்வாறு செலுத்தப்பட்ட பணம் அதிகாரிகளிடம் இருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை, மேலும் ஒரு நபர் மூலம் ரூபா 567,600 மாத்திரமே அறவிடப்பட்டுள்ளது. | தங்குமிடத்தை முன்பதிவு செய்வதற்கான நிலையான நடைமுறையானது, அவர்களின் முறைமை மூலம் ஒரு வருடத்திற்கு முன்பே செய்ய வேண்டும், இது கால எல்லையில் சரியாக மூடப்படும். அமைச்சின் பங்கேற்பு நாட்கள் உரிய நேரத்தில் தெரிவிக்கப்படவில்லை, மேலும் நாங்கள் பங்கேற்பாளர்களை அறைகளில் சுழற்சி அடிப்படையில் ஒதுக்குகிறோம். | முன்பதிவு செய்வதற்கு முன்னர் பங்கேற்பாளர்களின் உண்மையான எண்ணிக்கை மற்றும் தங்குவதற்கு தேவையான நாட்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 மனித வளங்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| குழுவிற்கான ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுக்கான முறையான திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பதவி வாரியான தகைமைகள் மற்றும் பதவி உயர்வுக்கான அளவுகோல்களை கோடிட்டுக் காட்டுதல் மற்றும் பதவி உயர்வுகளுக்கான அடிப்படையை நிறுவுதல் உள்ளிட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு ஒப்புக்கொண்டோம். | செயற்திறனான மனித வள முகாமைத்துவ முறைமையை நடாத்துவதற்கு ஆட்சேர்ப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 கூட்டிணைந்த திட்டம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கூட்டிணைந்த திட்டம் குழுவால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இது 10 ஆண்டுகளுக்கு வரைவு செய்யப்பட்டு, ஒவ்வொரு ஆண்டும் திருத்தப்பட்டு, அங்கீகாரம் அளிக்கப்பட்டவுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதி, அமைச்சுடன் பிரதிகள் பகிரப்படும். | கூட்டிணைந்த திட்டத்திற்கான வரைவை பூர்த்தி செய்து அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |